**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**...**

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

**Sessions Case No. ; SC.NO.47-20**

**Calender Case No. ;**

**Primary Register Case No;**

**Deposition of Witness for ; Prosecution 1**

**Defence**

**Court**

**Name :Shanmugam**

**Father's Name :**

**Age :**

**Religion :**

**Calling :**

**Address :**

**Phone /Mobile No. :**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of 16th day of September, 2022.**

**முதல் விசாரணை—**

**நான் தாமல் கிராமத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அபபா விவசாயம் செய்கிறார். நான் எலக்டிரிசியனாக வேலை செய்கிறேன். என்னுடைய அப்பாவிடம் ஆஜர் எதிரி கடன் கேட்டார், என் அப்பா பணம் இல்லை என்று சொன்னார். 14.11.19 ம் தேதி காலை 9. மணிக்கு பொன்னியம்மன் பட்டரை அருகில் என் அப்பா மட்டும் இருசக்கர வாகனத்தில் தனியாக சென்று கொண்டிருந்தார். வண்டி எண் ஞாபகத்தில் இல்லை. என் அப்பா வண்டியில் போகும்போது ஆஜர் எதிரி**

வழியை மறித்து அருவாளால் அவர் தலையில் வெட்டினார். அவ்வாறு ஏ்ன் அப்பாவீற்கு அடிபபட்ட விவரத்தை சம்பவ இடத்தில் இருந்த ராஜேந்திரன் என்பவர் என் வீட்டருகில் வந்து என்னிடம் தகவல் சொன்னார்கள். என் தந்தைக்கு தலையில் 2 இடத்தில் அடிப்பட்டிருந்தது. உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார். 108 க்கு போன் செய்து என் தந்தையை காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சென்னையில் உள்ள மியாட் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். இது சம்மந்தமாக நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார். அ.த.சா.ஆ.1 ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை – இல்லை

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

...

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

**Sessions Case No. ; SC.NO.47-20**

**Calender Case No. ;**

**Primary Register Case No;**

**Deposition of Witness for ; Prosecution 2**

**Defence**

**Court**

**Name :Rajendren**

**Father's Name :**

**Age :**

**Religion :**

**Calling :**

**Address :**

**Phone /Mobile No. :**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of 16th day of September, 2022.**

**முதல் விசாரணை—**

**நான் தாமல் கிராமத்தில் வசிக்கிறேன். நான் திருமண தரகராக தொழில் செய்கிறேன். என் மனைவி பெயர் சகுந்தலா அவர் சித்தாள வேலை செய்கிறார். அ.சா.1 என்னுடைய மகன் . அவர் ஒயரிங் வேலை செய்கிறார். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 2 வருடத்திற்கு முன்பு என் வீட்டில் இருந்து கிளம்பி என். எச் சாலைவழியாக பொன்னியம்மன் பட்டறை கூட்டு ரோடு அருகில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தில் நீன்றுகொர்டிருந்தார். அப்போது எனக்கு**

பின்பாக லாரி வந்ததால் நான் ஓட்டி சென்ற வாகனத்தை ஆஜர் எதிரியின் இருசக்கர வாகனத்தின் மீது உரசியவாறு ஓட்டி அதன் முன்பாக நிறுத்தினேன். அப்போது ஏன் என் வாகனத்தின் மீது உரசினாய் என்று ஆஜர் எதிரி கேட்டு கத்தியை எடுத்து என்னுடைய பின்னந்தலையில் வெட்டினார். நான் உடனே மயங்கி விழுந்துவிட்டேன். அதன் பிறகு நினைவு திரும்பும் போது நான் சென்னை மருத்துவமனையில் இருந்தேன். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை – இல்லை

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**...**

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

**Sessions Case No. ; SC.NO.47-20**

**Calender Case No. ;**

**Primary Register Case No;**

**Deposition of Witness for ; Prosecution 3**

**Defence**

**Court**

**Name :Rajendran**

**Father's Name : Kannan**

**Age :**

**Religion :**

**Calling :**

**Address :**

**Phone /Mobile No. :**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of 16th day of September, 2022.**

**முதல் விசாரணை—**

**நான் தாமல் கிராமத்தில் வசிக்கிறேன். நான் அசா.2 வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசிக்கிறேன். நான் டிராவல்ஸ் தொழில் செய்கிறேன். எனக்கு தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2019ம் ஆண்டு அ.சா2 ராஜேந்திரனுக்கு பொன்னியப்பன் பட்டறை என். எச் சாலையில் அடிப்பட்டதாக சொன்னார்கள். நான் சென்று பார்த்தேன். அவருக்கு**

ரத்தமாக இருந்தது எந்த இடத்தில் அடிப்பட்டது என்று குறிப்பாக தெரியவில்லை. ஆஜர் எதிரியும் எங்கள் தெருவிலேயே வசிக்கிறார். அடிபபட்ட ராஜேந்திரனை ஆம்புலன்ஸில் ஏற்றிவீட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அடிப்பட்ட ராஜேந்திரன் என்னுடைய அக்கா மகன்.

வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளித்துவிட்டு தற்போது அதற்கு பறம்பாக சாட்சியம் அளிப்பதால் இவரை பிற்ழ்சாட்சியாக கருதுமாறு அரசு தரப்பில் அனுமதி கோர அனுமதி வழங்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.

அ.த.குறுக்கு விசாரணை—

14.11.19 தேதி அசா.2 ராஜேந்திரன் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் பொன்னியம்மன் பட்டறை சென்றுவருவதக அவர் வீட்டில் செர்லிவிட்டு சென்னைபெங்களுர் சாலையில் காலை 9-45 மணியவில் சென்றபோது அப்போது மணிகண்டன் அவர் மனைவியுட் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தார் என்றும் மணிகண்டன் ராஜே3திரனிடம் தனது நிலத்தை விற்பனைக்கு கேட்டு வந்ததாக நினைத்து மணிகண்டன் அவர் ஒட்டி வந்த இருசக்கர வாகனத்தை நின்றுவிட்டு அ.சா.2 யை அசிங்கமான வார்த்தையால் பேசி இதோடு செத்துபோடா என்று சொலில் தனது மோட்டார் சைக்கிளில் வைத்திருந்த கத்தியை எடுத்து வெட்டினார் என்றும் இந்த சம்பவத்தை நான் மாதவனன் நேரில் பார்த்து மணிகண்டனை தடுத்தோம் என்றும் சம்பவ தகவலை ராஜேந்திரன் மகனுக்கு தகவல் தெரிவித்துவிட்டு சம்பவத்தில் காயம் ஏற்பட்ட ராஜேந்திரனை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன் என்று போலீஸ் விசாரணையில்

**சொல்லிவிட்டு தற்போது எதிரிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை / இல்லை**

## DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

...

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

**Sessions Case No. ; SC.NO.47-20**

**Calender Case No. ;**

**Primary Register Case No;**

**Deposition of Witness for ; Prosecution 4**
**Defence**
**Court**

**Name :Madhavan**

**Father's Name :**

**Age :**

**Religion :**

**Calling :**

**Address :**

**Phone /Mobile No. :**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of 16th day of September, 2022.**

**முதல் விசாரணை—**

**நான் தாமல் கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.2யை தெரியும். தேதி மாதம் எனக்கு ஞாபகத்தில் இல்லை.2019ம் ஆண்டு காலை 10 மணிக்கு அ.சா.2 பொன்னியம்மன் பட்டறை அருகில் தேசிய நெஞ்சாலையில்**

அடிப்பட்டு கீழே விழுநது இருப்பதாக தகவல் சொன்னார்கள். நான் போய் பார்த்தேன். நான் போய் பார்க்கும்போது வாய் மற்றும் உடம்பு முழுவதும் எல்லாம் ரத்தமாக இருந்ததால் எங்கு அடிப்பட்டு இருந்தது என்று தெரியவில்லை. நாங்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொன்னோம். அவரைகாஞ்சிபுரம் அரசு மருத்தவமனையில்சேர்தோம். பிறகு மேல் சிகிச்சைக்காக சென்னைக்கு அழைத்து சென்றோம். போலீசார் எங்களை விசாரணை செய்யவில்லை.

வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளித்துவிட்டு தற்போது அதற்கு பறம்பாக சாட்சியம் அளிப்பதால் இவரை பிற்ழ்சாட்சியாக கருதுமாறு அரசு தரப்பில் அனுமதி கோர அனுமதி வழங்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.

அ.த.குறுக்கு விசாரணை—

14.11.19 தேதி அசா.2 ராஜேந்திரன் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் பொன்னியம்மன் பட்டறை சென்றுவருவதக அவர் வீட்டில் செர்லிவிட்டு சென்னைபெங்களுர் சாலையில் காலை 9-45 மணியவில் சென்றபோது அப்போது மணிகண்டன் அவர் மனைவியுட் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தார் என்றும் மணிகண்டன் ராஜேந்திரனிடம் தனது நிலத்தை விற்பனைக்கு கேட்டு வந்ததாக நினைத்து மணிகண்டன் அவர் ஒட்டி வந்த இருசக்கர வாகனத்தை நின்றுவிட்டு அ.சா.2 யை அசிங்கமான வார்த்தையால் பேசி இதோடு செத்துபோடா என்று சொலில் தனது மோட்டார் சைக்கிளில் வைத்திருந்த கத்தியை எடுத்து வெட்டினார் என்றும் இந்த சம்பவத்தை நான் அ.சா.3 ராஜேந்திரனும் நேரில் பார்த்து மணிகண்டனை தடுத்தோம் என்றும் சம்பவ தகவலை ராஜேந்திரன்

மகனுக்கு தகவல் தெரிவித்துவிட்டு சம்பவத்தில் காயம் ஏற்பட்ட ராஜேந்திரனை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை –இல்லை

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

...

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

**Sessions Case No. ; SC.NO.47-20**

**Calender Case No. ;**

**Primary Register Case No;**

**Deposition of Witness for ; Prosecution 5**
**Defence**
**Court**

**Name :Sakunthala**

**Father's Name :**

**Age :**

**Religion :**

**Calling :**

**Address :**

**Phone /Mobile No. :**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of 16th day of September, 2022.**

முதல் விசாரணை–

நான் பாட்டை தெரு, தாமல் கிராமத்தில் வசிக்கிறேன். அச.ா.1 என்னுடைய மகன். அசா.2 ராஜேந்திரன் என் கணவர். நான் விவசாய வேலை செய்கிறேன். என் கணவர் தரகர் வேலை செய்கிறார். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டில் சாப்பிட்டு இருந்தபோது என்னுடைய கணவர் இருசக்கர வாகனத்தில் வேலைக்கு சென்றார். அவர் வேலைக்கு செல்லும்போது வழியில் ஆஜர் எதிரி காசு கேட்டு அவரை வெட்டினார். எனக்கு ஒரு பையன் வந்து தகவல் சொன்னார். அவருக்கு தலையில் பின் பக்கத்தில் வெட்டு காயம் இருந்தது. அவர் பொன்னியம்மன் பட்டறை அருகில் விழுந்து இருந்தார். நாங்கள் என் கணஒவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாககாஞ்சிபுரம் மருத்துவமனைக்கும் மற்றும் சென்னைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை – இல்லை

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

...

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

**Sessions Case No. ; SC.NO.47-20**

**Calender Case No. ;**

**Primary Register Case No;**

**Deposition of Witness for ; Prosecution 6**

**Defence**

**Court**

**Name :Sangeetha**

**Father's Name :**

**Age :**

**Religion :**

**Calling :**

**Address :**

**Phone /Mobile No. :**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of 16th day of September, 2022.**

**முதல் விசாரணை—**

**நான் தாமல் கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 என்னுடை கணவர் அவர் எலக்டிசியனாக இருக்கிறார. அ.சா.2 என்னுடைய மாமனார். அவர் நிலத் தரகராக வேலை செய்கிறார். ஆஜர் எதிரியை தெரியும். 14.11.19 அன்று என்னுடைய மாமனார் அ.சா.2 வீட்டில் உணவு அருந்திவிட்டு ஒரு அரை மணிநேரம் கழித்து பக்கதது வீட்டில் இருந்த**

**ஒரு நபர் என்னுடைய மாமனார் பொன்னியம்மன் பட்டறை அருகில் அடிபட்டு விழுந்ததாக தகவல் சொன்னார். என் மாமனார் மயங்கி இருந்ததாக சொன்னார். ஆஜர் எதிரி தலையில் வெட்டியதாக தகவல் சொன்னார்கள். நாங்கள் என் மாமனாரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக காஞ்சிபுரம் மருத்துவமனைக்கும் மற்றும் மியாட் சென்னைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.**

**குறுக்கு விசாரணை — இல்லை**